செய்தி வெளியீடு எண்: 1018 நாள்: 25.12.2009

# வரும் பொங்கல் – தைத்திங்கள் முதல்நாள், தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளை முன்னிட்டு ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம் !

# சென்னையில் முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைக்கிறார்!

## 1.1.2010 முதல் 10.1.2010 வரை தமிழகம் முழுவதும் வழங்கப்படும் !

தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை எளிய மக்கள் அனைவருக்கும் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் 1990ஆம் ஆண்டு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டது.

2010ஆம் ஆண்டு பொங்கல் – தைத்திங்கள் முதல்நாள், தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளை முன்னிட்டு வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டம் மாநில அளவில் சென்னையில் தொடங்கி வைக்கப்படும் என்றும், 1.1.2010 முதல் 10.1.2010 வரை தமிழகம் முழுவதிலும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்டு ஏழை எளிய மக்களுக்கு இலவச வேட்டி சேலைகளை வழங்குவார்களென்றும்; இத்திட்டத்தின்மூலம் 256 கோடி ரூபாய்ச் செலவில் 3 கோடியே 28 இலட்சம் பேருக்கு இலவச வேட்டி சேலைகள் வழங்கப்படுகின்றன என்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

இதன்படி வரும் ஜனவரி முதல் நாளன்று சென்னையில் நடைபெறும் விழாவில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏழை எளியோருக்கு இலவச வேட்டி சேலைகளை வழங்கி தமிழகம் முழுவதிலும் நடைபெறவுள்ள இப்பணிகளைத் தொடங்கி வைக்கிறார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.